மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்.
முன்னிலை:– **திருமதி. C.M. அமராவதி, M.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், செய்யூர்.
2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 29– ம் நாள் புதன்கிழமை
விசுவாவசு வருடம் ஆடி மாதம் 13– ம் நாள்
**ஆண்டுப் பட்டிகை வழக்கெண்.176/2025**
**CNR NO –TNCG16-000831-2025**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
PEW மதுராந்தகம் காவல் நிலையம்,
குற்ற எண். 164/2025.

... குற்றமுறையிடுவர்..

//எதிர்//

| | |
|---|---|
| 1 | ராகுல், த/பெ. மூர்த்தி, வயது.22 |

...எதிரி....

**Case Summary**

| Sl. No | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | Accused surrendered and station bail on 05.04.2025. |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | Final Report filed and Taken cognizance on 29.08.2025. |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4 | The date of questioning of the accused under Sections 251, 263, 269 and 274 of BNSS 2023, as the case may be | Accused questioned On 17.11.2025 |
| 5 | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 BNSS of the Code: | NIL |

| | | |
|---|---|---|
| 6 | Date of examination in-chief and cross- examination of a witness: | PW1 – 09.03.2026 Chief and cross<br>PW2 – 09.03.2026 Chief and cross<br>PW3 – 27.07.2026 Chief and cross |
| 7 | Date of examination of the accused under Section 351 BNSS of the Code: | 29.07.2026 |
| 8 | Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending /recalled | NIL |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 29.08.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 திரு. கார்த்திக், அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. சுரேந்தர், திரு. C. சக்திவேல், அவர்கள் முன்னிலையாகியும், இன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

**1.** இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

**2.** இவ்வழக்கின் எதிரியானவர் கடந்த 03.04.2025 ம் தேதி 15.00 மணியளவில் கொளத்தூர் கிராமத்தில் உள்ள அவரது வீட்டின் அருகே எட்டு மண் பானைகளில் அரசால் தடைசெய்யப்பட்ட பனங்கள் சுமார் 37 லிட்டர் விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியானவர் சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act r/w. 4(1) (d) TNP Act ன் கீழ் தண்டிக்கப்படதக்கவர் என்று PEW மதுராந்தகம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பபட்டு, அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல்களும் 231 BNSS பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

**4.** எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியிடம் குற்றங்கள் பற்றி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றத்தினை மறுத்தார். எனவே, இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1) (C) TNP Act r/w. 4(1) (d) TNP Act ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**5.** அதன்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் 1 முதல் 3 பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. அரசு தரப்பில் 1 முதல் 3 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து BNSS பிரிவு 351(1) (b) ன் கீழ் எதிரியிடம் வினவிய போது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார்.

**7.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் போதுமான

சாட்சியங்களுடன் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமில்லை நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:–</u>**

**8.** அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபனம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

**9.** அரசு தரப்பில் தலைமைக் காவலர் திரு. ராஜேஷ், அ.சா.1 ஆகவும், முதல்நிலை காவலர் திரு. முத்து, அ.சா.2 ஆகவும், காவல் ஆய்வாளர் திருமதி. மங்களபிரியா, என்பவர் அ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**10.** அரசு தரப்பில் கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1 ன் 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், அழித்தல் மகசரில் உள்ள அ.சா.1ன் 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2ன் 2வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும், அழித்தல் மகசரில் உள்ள அ.சா.2 ன் 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், அழித்தல் மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், அரசு தரப்பு சான்றவாணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**11.** இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் புலனாய்வு அதிகாரியான அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 03.04.2025 ம் தேதி 15.00 மணியளவில் மதுவிலக்கு வேட்டையாக தான், தலைமைக் காவலர் திரு. ராஜேஷ், முதல் நிலை காவலர் திரு. முத்து, அகியோர்களுடன் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு

வேட்டையாக சூனாம்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்திருந்தபோது தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கொளத்தூர் கிராமத்தில் எதிரியானவர் அவரது வீட்டின் அருகே சட்டத்திற்கு புறம்பாக 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 8 மண் பானைகளில் சுமார் 37 லிட்டர் பனங்கள் வைத்திருந்ததாகவும், எதிரியை பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்து எதிரியிடம் இருந்த பனங்கள்ளை காவலர்கள் முன்னிலையில் 15.15 மணியளவில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், பின்பு பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் அதே சாட்சிகளான காவலர்கள் முன்னிலையில் அன்றைய தினம் 15.30 மணியளவில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து அழித்தல் மகசர் அ.சா.ஆ.6 தயார் செய்து, பின்னர் எதிரியுடன் காவல் நிலையம் வந்து 15.30 மணியளவில் எதிரி மீது நிலைய குற்ற எண். 164/2025, ல் சட்டப்பிரிவுகள் 4(1) (C) r/w. 4(1) (d) TNP Act ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஐ பதிவு செய்து, இறுதியாக எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**12.** இந்த வழக்கை பதிவு செய்தது முதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தது வரை அனைத்துமே காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டுமே சாட்சியாக வந்துள்ளனர். எனவே, இந்த வழக்கில் முக்கிய நிகழ்வான 03.04.2025 ம் தேதி எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து தனிப்பட்ட சுதந்திரமான சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்பதும், அச்சொத்தை அவர்கள் முன்னிலையில் அழிக்கப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை. இந்த நிலையில் எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா இல்லையா என்பதை முதல் நிலையாக அரசு தரப்பில் தனிப்பட்ட சாட்சிகளின் மூலம் நிரூபனம் செய்யவில்லை.

**13.** இந்த வழக்கை தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.3 ம் அவருக்கு கீழே பணிபுரியும் காவலர்களை தவிர வேறு யாரையும் அந்த சம்பவம் குறித்து சாட்சிகளாக அவர் விசாரிக்காதது, இந்த புலன் விசாரணையின் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது. இந்நிலையில் விசாரணை அதிகாரி அவருக்கு புள்ளியல் தேவப்படுவதால் ஒரு பொய்யான வழக்கை ஜோடித்து உருவாக்கியிருக்கிறாரா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியத்திலிருந்து எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14.** எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரி இந்த வழக்கின் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முடிவில் எதிரி சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act r/w. 4(1) (d) TNP Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து அவரை பிரிவு 271(1) of BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**15.** இவ்வழக்கில் வழக்கு சொத்தான 37 லிட்டர் பனங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டதால் இவ்வழக்கில் வழக்கு சொத்து குறித்து ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

**16**. எதிரியின் பிணைப் பத்திரம் மேல்முறையீட்டுக்காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 – ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

AMARAVATHI

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by AMARAVATHI
Location: Cheyyur
Date: 2026.07.29 17:15:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
செய்யூர்.

**பின் இணைப்பு** –

**அரசு தரப்பு சாட்சிகள்** –

| சாட்சிகள் | பெயர்கள் | சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. ராஜேஷ், தலைமைக் காவலர், PEW மதுராந்தகம், செங்கல்பட்டு. | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.2 | திரு. முத்து, முதல் நிலை காவலர், PEW மதுராந்தகம், செங்கல்பட்டு. | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.3 | திருமதி. மங்களபிரியா, காவல் ஆய்வாளர், PEW மதுராந்தகம், செங்கல்பட்டு. | புலனாய்வு அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** –

| ஆவண வரிசை | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1 ன் 1 வது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | அழித்தல் மகசரில் உள்ள அ.சா.1 ன் 1 வது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | அழித்தல் மகசரில் உள்ள அ.சா.2 ன் 2 வது சாட்சி கையொப்பம். | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | அழித்தல் மகசரில் உள்ள அ.சா.2 ன் 2 வது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | அழித்தல் மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்– இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருள்** – இல்லை

AMARAVATHI

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by AMARAVATHI
Location: Cheyyur
Date: 2026.07.29 17:15:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
செய்யூர்.

**NOTE:**

1. No witnesses were retained for more than three times.

2. Accused is in bail during the period of trial.

3. The result of this case intimated to police.